# இணங்கச் செய்தல்

பேதுரு யூத மக்களுக்கு அறிவுறுத்தி (அப். 2:14-36), அவர்களின் இருதயங்களைத் தொட்டு (அப். 2:37) மற்றும் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குத் தெரிவித்த பிறகு (அப். 2:38), வசனத்திற்கு பதில்செயல் செய்ய அவர்களை இணங்கச் செய்யும்படி நாடினார் (அப். 2:40). இயேசுவின் சித்தத்திற்கு ஒரு பதில்செயலை நாடுதல் என்பது கிறிஸ்துவுக்கு(ள்) மக்களைக் கொண்டுவருவதில் ஒரு முக்கியமான பாகமாக உள்ளது.

இணங்கச் செய்தல் என்பது, தேவனுடைய வசனத்திற்குத் தக்க வகையிலான பதில்செயல் தருவதன் அவசியத்தை ஒரு நபர் தன் சிந்தையில் நினைத்துப் பார்க்க உதவுவதை உள்ளடக்க வேண்டும். அது ஒரு நபரை நமது சித்தத்திற்குப் பதில்செயல் அளிக்குமாறு வற்புறுத்துவதற்கான முயற்சியாய் இருக்கக் கூடாது.

சத்தியத்திற்கு (கற்பவர்) கீழ்ப்படிதலை ஆசிரியர் நாடும் முன்பு, கற்பவர் இரட்சிப்பு பற்றிய சத்தியத்தைப் புரிந்து கொண்டுள்ளாரா என்பதை ஆசிரியர் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் விளைவுகளை, கற்பவர் உணர்ந்தறிய வேண்டும்.

இந்த விஷயங்களை கற்பவர் புரிந்து கொண்டிருந்தால், போதிப்பவர் பிறகு உடனடியாக பதில்செயலின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய இதை விடச் சிறந்த வேளையை அவர் நினைத்துப் பார்க்க முடியுமா என்று போதிப்பவர் கேட்கலாம். பின்வரும் அனுகூலங்களும் உள்ளடக்கப்படக் கூடும்.

1. நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், அவர் உங்கள் வாழ்வில் செயல்படுவார்.
2. தேவனுடைய பிள்ளை என்ற வகையில் நீங்கள் கிறிஸ்தவ வாழ்வை வாழ உதவுவதற்கு அவர் உங்களுக்கு தம் ஆவியானவரை அனுப்புவார். (கலா. 4:6; எபே. 3:16).
3. தேவனுடைய அன்பான குடும்பத்தில் நீங்கள் ஒரு பாகமாவீர்கள்.
4. நீங்கள் கீழ்ப்படிவதினால் உங்களை நேசிக்கும் எவரும் மகிழ்வடை

வார். தேவன் மகிழ்வடைவார், இயேசு மகிழ்வடைவார், பரிசுத்த ஆவியானவர் மகிழ்வடைவார், தூதர்கள் மகிழ்வடைவார்கள், கிறிஸ்தவர் கள் மகிழ்வடைவார்கள், நீங்களே மகிழ்வடைவீர்கள் (அப். 8:39).

5. உங்கள் பாவங்கள் பற்றிய வருத்தத்தை நீங்கள் விட்டொழித்து, உங்கள் பாவங்களை வெற்றி கொள்ள உதவி பெறுவீர்கள்.

6. சக கிறிஸ்தவர்கள் உங்களுக்கு கிறிஸ்தவ வாழ்வை வாழ உதவுவார்கள், மற்றும் கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் உங்கள் வாழ்வினாலும் போதனையினாலும் மற்றவர்களுக்கு உதவுவீர்கள்.

7. வாழ்வு நிச்சயமற்றதாக உள்ளது. நீங்கள் நிச்சயமாய்க் கருதக் கூடியதெல்லாம் நிகழ்காலம் மட்டுமே ஆகும்.

8. நித்தியம் என்பது பலனை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கான ஒரு நீண்டகாலமாக உள்ளது, ஆனால் தண்டிக்கப்பட்டிருப்பதற்கும் அதுவே ஒரு நீண்ட காலமாக உள்ளது.

9. இயேசு எந்த வேளையிலும் திரும்ப வரக் கூடும். நாம் எல்லா வேளைகளிலும் தயாராக இருக்க வேண்டியது அவசியம் (மத். 24:42-46).

10. நாம் காத்திருந்தால் எல்லாம் இழந்து போகப்படக்கூடும் என்றிருக்கையில், கீழ்ப்படியக் காத்திருப்பதினால் ஏதொன்றையும் ஆதாயப்படுத்த முடியாது.

11. இந்த உலகம் உங்களிடமிருந்து எடுத்துப் போடக்கூடாத உள்ளான சமாதானத்தை நீங்கள் பெற்றிருப்பீர்கள்.

12. நீங்கள் தேவனுடன் நெருங்கிய தனிப்பட்ட சஞ்சரித்தலைப் பெற முடியும்.

கற்பவர் இந்தப் பன்னிரெண்டு அனுகூலங்களுக்கு பதில்செயல் செய்யாமல் இருப்பாரென்றால், அவர் காத்திருக்கத் தேர்ந்து கொண்டுள்ளது ஏன் என்று கேளுங்கள். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய இப்போதைக் காட்டிலும் சிறந்த வேளையொன்றை அவர் நினைக்க முடியுமா என்று போதிப்பவர் கேட்கலாம். அவர் கொண்டுள்ள எந்த மறுப்பையும் மென்மையாகக் கையாளுங்கள். இன்னும் அவர் காத்திருக்க விரும்பினால், அவரது கீழ்ப்படிதலுக்கு ஒரு நேரத்தை அவர் அமைக்க விரும்புகின்றாரா என்று கேளுங்கள். அவர் உங்கள் சித்தத்திற்குப் பதில்செயல் செய்வதினால் அல்ல ஆனால் நமது கிருபையும், இரக்கமும், பரிவிரக்கமும் கொண்ட தேவனுடைய அன்பிற்குப் பதில்செயல் செய்வதினாலேயே அவரது கீழ்ப்படிதலை நீங்கள் விரும்புவதாகக் கூறுங்கள்.

நீங்களும் மற்றவர்களும் உங்கள் ஜெபத்தில் அவரை உள்ளடக்கத் தொடருவது அவருக்கு விருப்பமா என்று கேளுங்கள். நீங்கள் அவரை நேசிக்கின்றீர்கள் என்பதையும், அவருடன் நீங்கள் பரலோகத்தில் தேவனு டைய நித்தியத்தைப் பகிர்ந்து கொள்வதை நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்கள் என்பதையும் அவர் அறியும்படி செய்யுங்கள். இன்னமும் அவர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியக் காத்திருப்பது என்பதை விரும்பினால், இன்னொரு பாடவேளைக்கு ஏற்பாடு செய்யுங்கள்.